கேளுந் திருநெல்லை கேள்வனே யொன்றுரைப்ப
வாளின் றிருட்டில் வழக்கெடுக்கி - னாளைபினைப்
பொல்லாத பொய்ச்சான்று போடில் வருகின்றேன்
வல்லை யெனக்கருள வா. 50

வாரா விடினும் வளநெல்லை நற்றாய்க்காய்ச்
சாரா துரைப்பேனச் சான்றதனைத் - தீரமுட
னீயருளா தேகிடினு நென்மா நினையாளோ
தாய்மனமுங் கல்லாமோ தான். 51

தானே விளையாடத் தன்சங்கற் பத்தாலே
வானே முதலாய் வகுத்ததலாற் - கேனமுளா
யுண்டோ சிறிதேனு மோதாயெங் கொற்றேச
மண்டானன் றிக்குடத்தின் மாண். 52

மாணார் மனோலயத்தை மாசற்றார் மன்னிடயான்
பூணா ரரிவையர்தம் போகத்தை - வீணேதா
னாடி யுழன்றேனே நங்கொற்ற நாதாகாற்
றாடி யெனவெற் கருள். 53

அருளே யவயவமா மாகாகா நாடாத்
தெருளே திருவுருவந் தேரீர் - பொருளோதுங்
கொற்றேசர்க் காதலினிக் கோண்மனமாம் வெம்பகையற்
றுற்றோரே பற்றார்பற் றோர். 54

ஓர்கொம் புடையானே யொருருவா யிங்குற்றுப்
பார்கொற்ற நாதனைநீ பாங்கென்றா - னேர்கோளுவீர்
பார்த்தேனே பார்த்தவெனைப் பற்றிச் சுகோததியி
லார்த்தானே யந்தோ வவன். 55

அவனே யிவனா மிவனே யவானாஞ்
சிவனே யிவையாவுந் தேரீர் - பவநோயற்
றர்வாளி தீக்கானி லாடும் பொருளீதே
பேர்வாழி சொல்லியிருப் பேம். 56

பேமற்றோ நாமளவில் பேரற்றோ மற்றோமென்
னாமற்றோங் கொற்றேசர் நாடுற்றே - யோமுற்றார்க்
கென்றும் பணிசெய்வோ மேமாறோ மேயுலகின்
முன்றுன் பினியிடைவோ மோ. 57

மோதப் பெருங்கடலே மும்முலையா ணாயகனே
யோதப் பெரிதருளு முண்மையனே - கோதற்ற
முத்தீசன் போற்று முளரிப் பதத்தோனே
சத்தீவா ளோயெற்குத் தான். 58

